செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 473 நாள்: 8/8/17

# 3வது தேசிய கைத்தறி தினத்தினை முன்னிட்டு அரசு கைத்தறி கண்காட்சி மற்றும் விற்பனை.

கைத்தறி தொழிலானது இந்திய திருநாட்டின் பாரம்பரிய தன்னிகரற்ற கைவினை தொழிலாக இருப்பதோடு, நாட்டின் பண்பாடு மற்றும் கலாச்சாரத்திற்கு தொடர்புடையதாக அமைந்துள்ளது. இத்தொழிலானது கிராமப்புற பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு பெருமளவு வேலைவாய்ப்பு வழங்குவதில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக மிக முக்கியமான தொழிலாக விளங்குவதோடு, இந்திய நாட்டின்/ மாநிலத்தின் பொருளாதாரத்தின் கணிசமான வருவாய் ஈட்டுவதுடன் அந்நிய செலாவணி ஈட்டவும் வழிவகுக்கின்றது.

இந்திய வரலாற்று ஏடுகளை புரட்டும்போது ஆங்கில ஏகாதிபத்திய அடக்குமுறையில் ஒரு அங்கமான வங்கப் பிரிவினையை எதிர்த்து, 1905ஆம் ஆண்டு ஆகஸ்ட் 7 அன்று கொல்கத்தா டவுன்ஹாலில் நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில் உதயமானது ''சுதேசி இயக்கம்''. இவ்வியக்கத்தின் முக்கிய நோக்கம் விதேசி பொருட்களை புறக்கணித்து சுதேசி பொருட்களை ஆதரிப்பது ஆகும். அதன்பொருட்டு கைத்தறி துணிகளை அணிவதின் முக்கியத்துவம் இந்திய மக்களிடையே வலியுறுத்தப்பட்டது. ''சுதேசி இயக்கம்'' துவக்கப்பட்ட ஆகஸ்ட்–07ஆம் தேதியினை தேசிய கைத்தறி தினமாக இந்திய அரசு அறிவித்ததுடன், அத்தினத்தில் இந்தியர்கள் அனைவரும் கைத்தறி ஆடையணிந்து, பண்டிகையாக கொண்டாட வேண்டுமென கேட்டுக் கொண்டது.

இந்திய திருநாட்டில் முதல் தேசிய கைத்தறி தினம் 7.8.2015 அன்று மாண்புமிகு இந்திய பிரதமர் அவர்களால் சென்னையில் கொண்டாடப்பட்டு, தமிழகத்திற்கு பெருமை சேர்க்கப்பட்டது. இரண்டாவது தேசிய கைத்தறி தினம் 7.8.2016–ல் வாரணாசியில் கொண்டாடப்பட்டது. மூன்றாவது தேசிய கைத்தறி தினம் 7.8.2017–ல் இந்தியா முழுவதும் கொண்டாடப்பட்டது.

மூன்றாவது தேசிய கைத்தறி தினத்தினை சிறப்பிக்கும் நோக்கத்துடன் கைத்தறி மற்றும் துணிநூல் துறையானது தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் மூன்று நாட்கள் சிறப்பு கைத்தறி கண்காட்சியினை நடத்தி வருகிறது. கைத்தறி மற்றும் துணிநூல் துறை வேலூர் சரகத்தின் சார்பாக மாவட்ட தலைநகரான வேலூர் மாநகரில் திருமுருக கிருபானந்தவாரியார் சாலையில் ( லாங்கு பஜார்) அமைந்துள்ள ஸ்ரீசண்முகனடியார் சங்க அரங்கில் 09.08.2017, 10.08.2017 மற்றும் 11.08.2017 ஆகிய மூன்று தினங்களில் மாவட்ட அளவிலான கைத்தறி கண்காட்சி மற்றும் விற்பனை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்கண்காட்சியினை வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 09.08.2017 அன்று முற்பகல் 10.00 மணியளவில் துவக்கி வைக்கவுள்ளார்கள்.

இக்கண்காட்சியில் புகழ்பெற்ற காஞ்சிபுரம் அசல் பட்டு சேலைகள், ஈரோடு படுக்கை விரிப்புகள், போர்வைகள், ஜமக்காளம், வடமணப்பாக்கம், பொன்னை மற்றும் குருவராஜப்பேட்டை பருத்தி சேலைகள், புகழ்பெற்ற லுங்கி இரகங்கள், நடுவீரப்பட்டு கொசுவலைகள், வடசேரி பருத்தி வேட்டிகள் ஆகியவை கண்காட்சிக்காகவும், விற்பனைக்காகவும் காட்சி அரங்குகளில் வைக்கப்படவுள்ளன. தமிழ்நாட்டிலுள்ள பிரசித்தி பெற்ற கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி துணிகள் ஒரே இடத்தில் கிடைக்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ள இக்கண்காட்சியில் விற்பனை செய்யப்படும் இரகங்களுக்கு அரசு தள்ளுபடியாக 20% வழங்கப்படுகிறது. தமிழக பாரம்பரிய கைத்தறி ஆடைகளின் மேன்மையினை எடுத்துரைக்கவும், புதிய தலைமுறையினர் பாரம்பரியத்தினை மறக்காமல் நினைவில் கொள்ளவும் கைத்தறி மற்றும் துணிநூல் துறையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த அரசு கைத்தறி கண்காட்சியின் விற்பனையானது ரூ.5.00 இலட்சத்திலிருந்து ரூ.7.00 இலட்சம் வரை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உதவி இயக்குநர்.
கைத்தறி மற்றும் துணிநூல்,
வேலூர்.

செய்தி 8.8.17